செ.வெ.எண் :688 நாள்: 23.10.2021

# தஞ்சாவூர் மாவட்டத்தில் 87 பயனாளிகளுக்கு ரூ. 42 லட்சம் மதிப்பிலான விலையில்லா வீட்டுமனைப் பட்டாவிற்கான ஆணைகள் வழங்கப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டத்திற்கு உட்பட்ட வல்லம் புதூர் சேத்தி கிராமத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் 87 பயனாளிகளுக்கு ரூ.42 லட்சம் மதிப்பிலான விலையில்லா வீட்டுமனை பட்டாவி ற்கான ஆணைகளை மாண்புமிகு தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.எஸ்.பழநி மாணிக்கம் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (23.10.2021) வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் 87 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாவிற்கான ஆணைகளை வழங்கி பேசியதாவது:-

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு, ஏழை எளிய மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், வல்லம் புதூர், சேத்தி கிராமத்தில் பல ஆண்டுகளாக வீட்டுமனை பட்டா விற்காக விண்ணப்பித்து கிடைக்கப் பெறாதவர்களுக்கு துரிதமாக வீட்டுமனை பட்டா கிடைக்க தமிழக அரசு, மாவட்ட வருவாய் துறைக்கு உத்தரவிட்டதன் அடிப்படையில் 87 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டா விற்கான ஆணைகள் இன்று வழங்கப்பட்டது. இந்தப் பட்டா என்பது நில வருவாய் பதிவு இது நிலத்தின் உரிமையை நிறுவுவதற்கான ஆவணமாகும், ஒரு சொத்தின் உண்மையான உரிமையாளரின் பெயரில் பட்டா இருக்கும் எனவே இப்பட்டாவிற்கான ஆணைகளை பெற்ற பயனாளிகள் இதனை முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாண்புமிகு தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.எஸ்.பழநி மாணிக்கம் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏழை எளிய மக்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி வருகிறார்கள். அதன் அடிப்படையில் தமிழக அரசு ஏழை எளிய மக்களுக்காக விலையில்லா வீட்டுமனைப் பட்டா வழங்கிட உத்தரவிட்டுள்ளது. அதன்படி நமது மாவட்டத்தில் வல்லம் புதூர் சேத்தி கிராமத்தில் பல ஆண்டுகளுக்கு மேலாக வீட்டுமனை பட்டாவிற்கு விண்ணப்பித்து பெற இயலாத 87 பயனாளிகளுக்கு இன்று வீட்டுமனை பட்டா விற்கான ஆணை வழங்கப்பட்டது. மேலும் இவர்களுக்கு தமிழ்நாடு அரசின் அரசாணை எண்.318-ன் கீழ் ஆட்சேபனையற்ற புறம்போக்கில் குடியிருந்து வரும் 47 நபர்களுக்கும், நத்தம் வகைப்பாடுடைய புலத்தில் குடியிருந்து வரும் 40 நபர்களுக்கும் ஆக கூடுதலாக 87 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பயனாளிகள் அனைவரும் ஆதி திராவிடர் வகுப்பை சேர்ந்தவர்கள். விலையில்லா வீட்டுமனைப் பட்டா வின் மொத்த மதிப்பு ரூ. 42 லட்சம்

ஆகும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் திருவையாறு சட்ட மன்ற உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.கே.ஜி.நீலமேகம், கூடுதல் ஆட்சியர் (வருவாய்) மரு. என்.ஓ. சுகபுத்ரா இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி.உஷா புண்ணியமூர்த்தி, கோட்டாட்சியர் திரு. ரஞ்சித், வட்டாட்சியர் திரு. மணிகண்டன், வல்லம் புதூர் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.சாரதா மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**